Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 8

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி - 17 04-10-2003 சனிக்கிழமை ஓசை 228




## குருநகர்ப்பகுதியில் பதற்றநிலை

# இராணுவ துருப்புக்காவி மோதி இரு இளைஞர் பலி;

# சடலங்களை அகற்றவிடாது மக்கள் மறியல்!

## கல்வீச்சு, கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குருநகர் பகுதியில் இராணுவத் துருப்புக்காவி மோதி இரு இளைஞர்கள் பலியானதையடுத்து அப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. பலியான இளைஞர்களின் சடலங்களை விசாரணையின்றி படையினர் அகற்ற முயன்றவேளை அவற்றை அகற்ற விடாது மக்கள் மறியல் போராட்டம் நடத்தினர். இதனையடுத்து அப்பகுதியில் பெருமளவு பொலிசாரும் படையினரும் குவிக்கப்பட்டு மறியல்போராட்டம் நடத்தியோர்மீது கண்ணீர்ப்புகை தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் படையினர் மேற்கொண்டனர். இதனையடுத்து படையினர் மீது கல்வீச்சு நடத்தப்பட்டது.**

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, யாழ். கண்டிவீதியின் குருநகர் தண்ணீர்த் தாங்கியடிப் பகுதியில் வேகமாக வந்த இராணுவத் துருப்புக்காவி ஒன்று உந்துருளியொன்றுடன் மோதியதில் உந்துருளியில் பயணம் செய்த இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

உரும்பிராய் மேற்கு அன்னங்கைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய மகாலிங்கம் லிங்கரூபன் என்பவரும், பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய வீராசகுமார்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பதற்றத்தைத் தடுக்க முயற்சி

## ராணுவத்தின் ஒத்துழைப்பின்மையால் தோல்வி

யாழ். குருநகர் பகுதியில் இராணுவத்தின் வாகனம் மோதி இரு இளைஞர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றநிலையைப் போக்க விடுதலைப்புலிகள் மேற்கொண்ட முயற்சி, இராணுவத் தரப்பு பின் ஒத்துழைப்பு இன்மை, இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு என்பனவற்றால் குழப்பமடைந்தது.

விபத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையைப் போக்க கண்காணிப்புக் குழுவினர், சில முயற்சிகளை மேற்கொண்ட வேளையில் அது தோல்வியில் முடிந்துள்ளதைத் தொடர்ந்து கண்காணிப்புக்குழுவினால் விடுதலைப்புலிகளின் உதவி நாடப்பட்டது.

இதனையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த விடுதலைப்புலிகள் சுமுகநிலை ஏற்படுத்தும் நோக்கில் இராணுவ-பொலிஸ் தரப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தினர். இதன் போது பதற்றத்தைக் குறைக்கும்

(8ஆம் பக்கம் பார்க்க)

### - காஞ்சிரங்குடாவில் புதிய முகாம் -

## விசேட அதிரடிப்படையின் குற்றச்சாட்டு கண்காணிப்புக்குழுவால் நிராகரிப்பு

மட்டக்களப்பு காஞ்சிரங்குடாவில் புலிகள் புதிய முகாம் ஒன்றை அமைந்து வருவதாக சிறிலங்கா விசேட அதிரடிப்படை தெரிவித்த முறைப்பாட்டை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆதாரமற்றதென மறுத்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு காஞ்சிரங்குடாவில் புதிய முகாம் ஒன்றை அமைத்து வருவதாக விசேட அதிரடிப்படை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டது.

தற்சமயம் அமைந்துள்ள முகாமுக்கு அருகிலேயே இந்த புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படை கூறியது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்த்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டமைக்கான சாட்சியங்கள் எதுவும் இல்லையென தெரிவித்துள்ளார். (52)

## பன்னிரு வேங்கைகள் நினைவுநாள் வவுனியாவில் அனுஷ்டிக்க ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

இலங்கை-இந்திய கூட்டுச் சதிக்குப் பலியாகிய லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளினதும் நினைவு நாள் வவுனியாவில் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பன்னிரு வேங்கைகளினதும் நினைவு நாளான நாளை வவுனியாவில் உள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும், பொதுஸ்தாபனங்களிலும், விடுதலைப்புலிகளின் அரசியல்துறைச் செயலகங்களிலும் காலை பன்னிரு வேங்கைகளினதும் திருவுருவப்படம் வைக்கப்பட்டு சுடரேற்றி மலர் அஞ்சலி நிகழ்வும், நினைவுரைகளும் நடைபெற உள்ளன. அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு கந்தபுரம் பொதுமைதானத்தில் பிரதேசப் பொறுப்பாளர் குட்டி தலைமையில் நினைவுரைகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (10)

பரு.யில் தனித்திருந்த பல்கலை மாணவி

## எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

வீட்டில் தனித்திருந்த யுவதி ஒருவர் எரியுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவமொன்று பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3ஆம் வருட மாணவியான கார்த்திகா (வயது22) என்பவரே இறந்தவராவார்.

நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் பருத்தித்துறை, தம்பசிட்டிக்கான வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வீதியிலுள்ள குறித்த யுவதியின் வீட்டின் அறையொன்றினுள்ளே முற்றாக எரிந்த நிலையில்சடலமாக

(8ஆம் பக்கம் பார்க்க)

## அ.உ.பா. வலயத்துக்கு வெளியேயுள்ள ஆலயம் செல்லவும் படையினர் தடை

தென்மராட்சி கிழக்கு கெற்பேலி கிராமத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள ஆலய மொன்றில் பொதுமக்கள் வழிபாடு செய்வதற்கான அனுமதியைப் படைத்தரப்பு மறுத்துள்ளது.

கெற்பேலி தரவை நாச்சிமார் கோவிலில் நவராத்திரி விழா நிகழ்வுகளை மேற்கொள்ளவே படைத்தரப்பு அனுமதி மறுத்துள்ளது.

கிளாலி கடற்படைத் தளத்திற்கு வெளியேயுள்ள இவ் ஆலயத்திற்கு பக்தர்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா நேரில்

(8ஆம் பக்கம் பார்க்க)

### உருவப்படம் இணைப்பு

லெப்ரினன் கேணல் குமரப்பா, லெப்ரினன் கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் உருவப்படம் இன்றைய நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## த.பு.க. — யுனிசெவ் இணைந்து சிறுவர் இடைத்தங்கல் முகாம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து அமைத்த சிறுவர் இடைத்தங்கல் முகாம் நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட இவ் இடைத்தங்கல் முகாமை காலை 11.15 மணியளவில் சமாதான நடவடிக்கை இணையாளர் டாக்டர் குணரட்ண நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் கே.பி.ரெஜி சிறிலங்கா சமாதான நடவடிக்கைகள் செயலக இணைப்பாளர் டாக்டர் குணரட்ண, யுனிசெவ் நிறுவன தெற்காசிய பிராந்திய இயக்குனர் சதிக்றாசீட், யுனிசெவ் நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட்சைபன் கிளி.அரசாங்க அதிபர், கரைச்சிப் பிரதேச செயலர் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்த வயது குறைந்த சிறுவர்களை தங்க வைத்து புனர்வாழ்வளிப்பதற்காக அமைக்கப்பட்ட இம்முகாமில் விடுதலைப்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

## எமது தேசியத் தலைவர் சிறார்களின் எதிர்காலம் குறித்து கரிசனைகொண்டுள்ளார்.

### அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன்

சிறுவர்தான் எமது நாட்டின் வளம். மக்களின் எதிர்காலம் அவர்களின் கையில் தான் தங்கி உள்ளது. இவர்கள் குறித்து எமது தேசியத்தலைவர் மிகுந்த அக்கறையும் கரிசனையும் கொண்டிருக்கிறார் என தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற சிறுவர் இடைத்தங்கல் முகாம் திறப்புவிழாவில் கலந்து சிறப்புரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எம்மீது திணிக்கப்பட்ட கடும்யுத்தம் பெரும் பொருளாதார சுமைகள் என்பன எம்மீது சுமத்தப்பட்ட போதும் எமது தலைமை சிறுவர்களின் எதிர்காலம் குறித்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இதன்பிரகாரம் செஞ்சோலை காந்தரூபன் அறிவுச்சோலை போன்ற இல்லங்களை ஒரு தசாப்தத்துக்கு மேலாக நடத்திக் கொண்டிருக்கிறது.

எமது தாயகப் பகுதியில் யுத்தத்தின் மூலம் திட்டமிட்ட ரீதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

06.09.2003 அன்று வேலாயுத பிள்ளை முருகையா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், பயணிகள் அனுமதி அட்டையும் துணுக்காய்க்கும், மாங்குளத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### தவறிவிட்டது

பாலகிருஷ்ணன் கிருஷ்ணகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 26.09.03 அன்று விசுவமடுவிற்கும் சுதந்திரபுரச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (3819)

### தேங்காய் விற்பனை

ஒரு லொறி லோட் தேங்காய் விற்பனைக்குண்டு. இரத்தினம் பாம் சுதந்திரபுரம் மத்தி, உடையார்கட்டு. (3816)

### ஆராதனா ஒலிப்பதிவு

கௌரிக்காப்பு பாடல்கள், கந்தசஷ்டி கவசம், பக்தி கீதங்கள், புதிய திரை இசைக்கதம்பங்கள், பழைய பாடல்கள், ஒலிச்சித்திரங்களும் ஒலிநாடா உடன் பெற்றுக் கொள்ள.... யாழ் ஒளி புகைப்படக் கலையகம், டிப்போச் சந்தி, யாழ். அருவி குளிரகம், கிளிநொச்சி. ஆராதனா ஒலிப்பதிவு, வவுனியா. (3812)

# யாழ்.பல்கலை கலைப்பிரிவு முதல்வருடமாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பிரிவு மாணவர்கள் கடந்த புதன்கிழமை முதல் தமது விரிவுரைகளை பகிஷ்கரித்துள்ளனர்.

மூன்றாம் வருட மாணவர்களுக்கும் முதலாம் வருட மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் முதலாம் வருட மாணவர்களில் பதினொரு பேர் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக சமரச முடிவெடுக்குமாறு கோரியே மேற்படி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் முதலாம் வருட மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். (33)

# பயிரழிவை ஏற்படுத்திய கட்டாக்காலி மாடுகள் விற்பனை

(உடையார்கட்டு)

விசுவமடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 10.00 மணிக்கு றெட்பானா சந்தியில் பயிரழிப்பில் ஈடுபட்டு பிடிபட்ட கட்டாக்காலி மாடுகளை பகிரங்க ஏல விற்பனைக்கு விடவுள்ளனர். மாட்டு உரிமையாளர்கள் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலம் நடைபெறும், என தெரிவிக்கும் பிரதேச இணைப்பாளர் ஏலத்திற்காக தயாராக உள்ள மாட்டின் குறி விபரங்களையும் அறியத் தருகிறார். குறிவிபரம் ரி.ஆர், வெள்ளை நாண்பன் ரி.ஜே.கறுப்பு நாகு, சிவப்பு V.X.பசுக்கன்று M.A.கறுப்புப் பசு S.S.சிவப்புப்பசு, மாவெள்ளை பசுக்கன்று (குறியற்றது) (19)

# சர்வதேச சமூகப் பயிற்சியாளர்களின் உதவி எமக்கு மகிழ்ச்சி தருகின்றது

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

இன்றைய யுத்தமற்ற சூழ்நிலையிலும் வடக்கு, கிழக்கில் வாழும் சிறுவர்களின் விளையாட்டு அபிவிருத்திக்கு உதவி செய்ய சிறிலங்கா அரசு பின்னடிக்கின்ற நிலைமையில் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த நீங்கள் சேவை அடிப்படையில் எமது சிறுவர்களுக்கு உதவ முன்வந்திருப்பது எமக்குப் பெரும் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அளிக்கிறது என விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆசிய ஜேர்மன் விளையாட்டு பரிமாற்றத்திட்டத்தின் கீழ் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட இரு நாட் பயிலரங்கில் பயிற்றுனர்களுக்கான விசேட சந்திப்பின்போது தெரிவித்தார்.



பயிற்சியாளர்களும், பயிற்சி பெற்ற சிறுவர்களும்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: கடந்த இரு தசாப்தங்களாக எம்மீது திணிக்கப்பட்ட யுத்தத்தினால் ஏழு இலட்சம் சிறுவர்கள் பாதிப்படைந்துள்ளதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சிறுவர்களின் அபிவிருத்தி பற்றி அக்கறை சிறிலங்கா அரசுக்கு இன்றும் ஏற்படவில்லை என்பதனை நேரடியாக நீங்கள் அவதானித்துள்ளீர்கள். அதனை உங்களுடைய சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தாலே அது எமது சிறுவர்களின் எதிர்காலத்துக்கு பேருதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மைதானத்தில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது. இப்பயிலரங்கில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த வட்டக்கச்சி ம.வி., உருத்திரபுரம் ம.வி., கிளிநொச்சி ம.வி., முழங்காவில் ம.வி., பளை மத்திய கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 60 சிறுவர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சி செயற்திட்டமானது 3 வருட காலத்தைக் கொண்டதாக அமையும் எனவும், இதன் மூலம் உதைபந்தாட்டத்தின் தரத்தை கிளிநொச்சியில் உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. தொடராக நடாத்தப்படவுள்ள இச் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக 10 உதைபந்தாட்டப் பயிற்றுனர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இச் செயலமர்வை பயனுள்ளதாக ஆக்குவதற்கு மேற்குறித்த பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்வித்திணைக்களம் என்பன பக்கபலமாக அமைய வேண்டும் எனவும் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் வேண்டு கோள விடுத்துள்ளார். இச் செயற்திட்டத்தினோடு மாணவருக்கும், பயிற்றுனர்களுக்கும் மேலதிக தொடர் பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செயலமர்வை ஜேர்மனியைச் சேர்ந்த ரொபியாஸ், பிரிஜெட், அன்ஜா ஆகியோரும் இத்தாலியைச் சேர்ந்த கப்ரியேலும் நடாத்துகின்றனர் என்பதுடன் இச் செயற்திட்டத்தின் இணைப்பாளராக அ.அன்ரன் அன்பழகன் செயற்பட்டார்.

# ஆழியவளை திலீபன் மருத்துவமனையில் 1457 நோயாளருக்குச சிகிச்சை

(ஆழியவளை)

வடமராட்சிக் கிழக்கு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் கடந்த 9ஆம் மாதம் 1457 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் வைரஸ் காய்ச்சலுக்கு 230 பேரும், மலேரியாக் காய்ச்சலுக்கு 85 பேரும சுவாச வலித் தொற்றுக்கு 113 பேரும், தொய்வுக்கு 63 பேரும் உயர் குருதி அமுக்கத்திற்குப் 18 பேரும், குருதிச் சோகைக்கு 15 பேரும பாம்புக்கடிக்கு ஒருவரும் ஏனைய நோய்களுக்கு 932 பேருமாக சிகிச்சை பெற்றுள்ளனர்.


# தமிழீழ விளையாட்டுத்துறையால் நடாத்தப்படும் மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தே சுற்றுப்போட்டி 2003

முதல் தடவையாக தமிழீழத்தில் எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய கராத்தே போட்டி ஒக்ரோபர் மாதம் நடுப்பகுதியில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படுவதற்கு எம்மால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் வீர வீராங்கனைகள் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 10.10.2003க்கு முன்னர் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களுக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைப்பதுடன் மேலதிக விபரங்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்துடன் அல்லது தொலைபேசி (222-5715) ஊடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் இப்போட்டியில் வெற்றிபெறும் வீர வீராங்கனைகளுக்கு பதக்கங்களும், சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படும் என்பதனை தமிழீழ விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விளையாட்டுத்துறை

(சி-8285)



# தேசிய சேமிப்பு வங்கி கிளிநொச்சிக் கிளை

தே.சே.வ. இன் கிளிநொச்சிக் கிளை 2003 ஒக்டோபர் 06ஆம் திகதி முதல் இல.355/1, கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட கட்டடத்தில் இயங்கவுள்ளது.

எமது சேமிப்புத் திட்டங்களும் கடன் திட்டங்களும்

- சிறுவர்களுக்கான "ஹப்பன்" "புஞ்சி ஹப்பன்" "பிரார்த்தனா" கணக்குகள்
- இளைஞர்களுக்கான "இத்துரு மித்துரு" கணக்குகள்
- நெஷனல் சேமிப்புச் சான்றிதழ்கள்
- வெளிநாடுகளில் தொழில்புரியும் வேளையில் சேமிப்பதற்கான "ரட்ட இத்துரு" கணக்குகள்
- மகளிருக்கான "ஸ்திரி" கணக்குகள்
- ஆயுட்கால வருமானம் வழங்கும் "பிரெண்ட்ஸ்" கணக்குகள்
- நாட்டின் மூத்த பிரசைகளின் நிலையான வைப்புக் கணக்குகளுக்கு சாதாரண வட்டி வீதத்தை விட 1% கூடுதலான விசேட வட்டி
- தே. சே.வ. கிளைகளுக்கு "வோல் ஸ்ட்ரீட் இன்ஸ்டன்ட்கேஷ்" ஊடாக வெளிநாட்டிலிருந்து உள்ளக பணமனுப்புதல்கள்
- தே.சே.வ. இன் எந்தவொரு கிளையிலும் ஓமானின் "முசாண்டம் கொடுப்பனவுக் கட்டளைகள்" இற்கு உடனடியாகப் பணக் கொடுப்பனவு
- நீங்கள் எப்போதும் வெற்றியீட்டக் கூடிய "ரிதி ரேகா" அதிர்ஷ்ட வெள்ளி சேமிப்புச் சான்றிதழ்கள்
- குறைந்த வட்டியில் அதிக பணம் வழங்கும் "ரண் சஹன தங்க நகை அடகுச் சேவை"
- சொந்தத் தேவைகளுக்கான சுயதேவைக் கடன்கள்.

- அனைத்து சேமிப்புக் கணக்குகளுக்கும் ரூபா 300,000/- இற்கு மேற்படாத காப்புறுதித் திட்டம்.
- உங்களது வைப்புக்களுக்கு மிக உயர்ந்த வட்டி வீதமும் அரசாங்க உத்தரவாதமும் வழங்குகின்றது.

2003 ஒக்டோபர் 06ஆம் திகதி எமது கிளை இல. 355/1, கண்டி வீதி, கிளிநொச்சிக்கு இடம்மாறுகின்றது

எங்கள் கிளையில் உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் சேமிப்பு மற்றும் கடன் வாய்ப்புக்கள்

2003 ஒக்டோபர் 06ஆம் திகதி உங்கள் குடும்ப வங்கியின் கிளிநொச்சிக் கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

NSB

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
இல:355/1,
கண்டி வீதி,கிளிநொச்சி.

(சி-8536) SITT Graphics

# ஈராக் குறித்த அமெரிக்காவின் புதிய நகல் தீர்மானத்திற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் கண்டனம் தெரிவிப்பு

## ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின் நாடுகளும் எதிர்ப்பு

(வாஷிங்டன்)

**ஈராக் சம்பந்தமான புதியநகல் தீர்மானம் ஈராக்கிய மக்களிடம் அந்த நாட்டின் நிர்வாகத்தை இயன்றளவு விரைவில் ஒப்படைக்க வழி வகுக்கவில்லையெனக் கூறி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் கண்டனம் செய்துள்ளார்.**

ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி உட்பட ஏனைய பாதுகாப்புச் சபை அங்கத்துவநாடுகளும் இவ்வாறான கருத்தையே வெளியிட்டுள்ளன. ஸ்பெயின் தூதுவர் அங்கு உரையாற்றுகையில், தங்களது எதிர்பார்ப்புக்களை இப்புதிய நகல் தீர்மானம் பூர்த்திசெய்யவில்லையென தெரிவித்துள்ளார்.

புதிய நகல் தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ள அமெரிக்கா ஈராக்கிய மக்களிடம் அந்த நாட்டின் நிர்வாகம் படிப்படியாக ஒப்படைக்க வேண்டுமென தெரிவித்துள்ளது. அமெரிக்க இராணுவம் ஈராக்கிலிருந்து வெளியேறுவதற்கான கால எல்லை அதில் கூறப்படவில்லை. அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டு பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னரே ஈராக்கிய நிர்வாகம் அந்நாட்டு மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

இருப்பினும் இத்தீர்மானம் பாதுகாப்புச்சபையில் விவாதத்திற்கு வரும்போது எந்தவொரு நாடும் அதற்கு எதிராக வீற்றோ அதிகாரத்தைப் பிரயோகிக்கப் போவதாக இதுவரை அறிவிக்கவில்லை.

## சுகயீனமுற்ற நிலையில் பாப்பரசர்

(றோம்)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர்சின்னப்பர் நோய்வாய்ப்பட்டுள்ளதாக வத்திக்கானில் முக்கிய பதவி வகிக்கும் கருதினார் ஜோசப் றெக்சின் கூறியுள்ளார். 83 வயதான பாப்பரசருக்கு கை, கால் நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், இவரின் உடல் நிலை தேற பிரார்த்திக்குமாறும் கருதினார் ஜோசப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரை வீட்டுக்கு வருமாறு கோரி அமெரிக்காவின் சென்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற ஊர்வலம்.

## ஈராக் செல்வது மிக ஆபத்தானது அமெ. குடிமக்களுக்கு எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்க மக்கள் ஈராக்கிற்குச் செல்வது தொடர்பாக புதிய எச்சரிக்கைகளை வெளிவிவகாரத் திணைக்களம் விடுத்துள்ளது.

ஈராக்கிய பயணம் அபாயகரமானதென இதுவரை அறிவிக்கப்பட்டபோதிலும் தற்போதைய எச்சரிக்கையில் 'மிகவும் அபாயகரமானதென' விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்க மக்கள் ஈராக்கிற்கான பயணம் மேற்கொள்ள வேண்டாமெனக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானில் இரு கனேடிய வீரர் கண்ணிவெடியில் சிக்கிப் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூர் நகரில் இரண்டு கனேடிய அமைதிப் படை வீரர்கள் நேற்று முன்தினம் கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்துள்ளனர். மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் பயணம் செய்த ஜீப்வண்டியும் சேதமடைந்துள்ளது.

இது தொடர்பாக கனேடியப் பிரதமந்திரி கருத்துத் தெரிவிக்கையில், ஆப்கானிஸ்தானில் கடமையாற்றும் நேட்டோ தலைமையிலான அமைதிப்படையில் ஐயாயிரத்திற்கும் அதிகமான வீரர்கள் உள்ளனரெனவும், இவர்களில் 2000 பேர் பிரான்ஸ் வீரர்களெனக் கூறியுள்ளார். இத்தகைய சம்பவங்களினால் ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகள் எவ்வகையிலும் பாதிப்படையமாட்டாதென அவர் மேலும் கூறியுள்ளார்.

## மேற்குக் கரையில் மேலும் 600 வீடுகளைக்கட்டி இஸ்ரேலியரைக் குடியேற்ற நடவடிக்கை

(டெல்அவிவ்)

மேற்குக் கரையோரப் பகுதியில் மேலும் 600 புதிய வீடுகளை அமைக்கப்போவதாகவும், நிர்மாணிக்கப்பட்டுவரும் இலத்திரனியல் வேலியை மேலும் 356 கிலோ மீற்றருக்கு அதிகரிக்கப்போவதாகவும் இஸ்ரேல் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

அத்துடன் இஸ்ரேலிய மக்கள் வாழ்வதற்கு இக்குடியேற்றத் திட்டங்கள் மிகவும் அவசியமானதெனவும், பலஸ்தீனர்கள் இஸ்ரேலுக்குள் ஊடுருவுவதைத் தடுக்க இலத்திரனியல் வேலி அவசியமென இஸ்ரேல் மேலும் கூறியுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் இது பற்றி கூறுகையில், இஸ்ரேலின் இத் திட்டங்களையிட்டு அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதென கூறியுள்ளார். இவர்களின் இப்புதிய திட்டங்களினால் மத்திய கிழக்கில் சமாதான நடவடிக்கைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளன என பலஸ்தீன அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, காஸா முனையில் நேற்று முன்தினம் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதனால், பலஸ்தீனர் ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெக்ஸிக்கோவில் வன்முறை

மெக்ஸிக்கோவில் மாணவர்கள் மனித உரிமை அமைப்பினர் நடத்திய பேரணியில் திடீர் வன்முறை வெடித்துள்ளது. இதனால் 60 மாணவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். தென்னமெரிக்க நாடான மெக்ஸிக்கோவில் கடந்த 1968இல் மாணவர்கள் மீது காவல் துறையினர் நடத்திய தாக்குதலில் 300இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக யாருமே கைது செய்யப்படவில்லை என்பதுடன் விசாரணைகள்கூட நடைபெறாமல் வழக்கு முடிக்கப்பட்டது. இந்த சோக சம்பவத்தின் 35ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.



இஸ்ரேலியப் படையினரால் நிர்மூலமாக்கப்பட்ட தனது வீட்டைக் கவலையுடன் பார்த்து நிற்கும் பலஸ்தீனப் பெண்.

## சந்திரபாபு நாயுடு மீதான தாக்குதல் குறித்து ஆறு சந்தேக நபர்கள் கைது

(ஹைதராபாத்)

ஆந்திரா முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு உட்பட ஐந்து பேர் காயமடைந்த கிளைமோர்த் தாக்குதல் தொடர்பாக விசாரிப்பதற்காக பொலிசார் ஆறு பேரை கைது செய்துள்ளனர்.

இவர்கள் இடது சாரி தீவிரவாத குழுக்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஆந்திரா பிரதேசப் பொதுவுரிமை குழுவைச் சேர்ந்தவர்கள். அத்துடன் இவர்கள் இக் குண்டு வெடிப்பிற்கு காரணமாக கருதப்படும் மக்கள் போர்க் குழுவுடனும் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படுவதாக ஆந்திராப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.



வட கொரியாவை அணுவாயுத உற்பத்தியை நிறுத்துமாறு கோரி தென் கொரிய தலை நகர் சியோலில் வட கொரிய சனாதிபதியின் உருவப்படத்தை தீயிட்டு கொளுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்.

## அல் — ஹைதா — பாக். படையினர் மோதல் 8 அல் — ஹைதாக்கள், 2 பாக். படையினர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிய படையினர் சுட்டதில அல்-ஹைதா அமைப்பைச் சேர்ந்த எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 18 பேரை ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் வைத்து பாகிஸ்தான் படையினர் கைது செய்துள்ளனர். இச்சம்பவத்தின்போது அல்-ஹைதா அமைப்பினர் பாகிஸ்தான் படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டதில் இரண்டு பாகிஸ்தான் படையினர் உயிரிழந்துள்ளதுடன் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

## 11 ஆபிரிக்கர் பிரிட்டனில் கைது

(லண்டன்)

பிரிட்டனில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 11 ஆபிரிக்க நாட்டவர்கள் கடந்த செவ்வாயன்று கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாத சம்பவங்களில் ஈடுபட எத்தனிப்பவர்களை இச்சட்டத்தின் கீழ் விசாரிக்க முடியும்.வீடு வீடாகத் தேடுதல் மேற்கொள்ளவும் இச்சட்டம் அனுமதியளிக்கின்றது என்று பிரிட்டன் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாகச் சந்தேகித்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கப்பல் ஒன்றை பீரங்கி பொருத்தப்பட்ட அவுஸ்திரேலிய உலங்கு வானூர்தி ஒன்று கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது.



# மருத்துவத்துறையின் ஆரம்ப காலம்

கிறிஸ்து பிறப்பிற்கு நாணூறு வருடங்களுக்கு முன்பு கிரேக்க நாட்டவரான ஹிப்போகிரேட்டஸ் என்பவரே விஞ்ஞான ரீதியாக மருத்துவத்தை அணுகிய முதல் நபர்! மட்டுமன்றி பேய் பிசாசுகளினால் மனிதனுக்கு நோய் வருவதனை ஆணித்தரமாக மறுத்த முதல் மனிதரும் இவர் ஆவார்.

இறந்தவர்களின் உடம்புகளை திறந்து பார்ப்பது குற்றம் என்று மத குருமார்கள் கடுமையாக எச்சரித்திருந்ததால் மனித உடலின் செயற்பாடே அந்தக்காலத்தில் மர்மமாக இருந்தது. ஹிப்போகிரேட்டஸை அடுத்து துருக்கி நாட்டைச் சேர்ந்த கேலன் என்ற மருத்துவர் வந்தார்.

மனித உடலில் இரத்தம், சளி, பித்த நீர், கடும் பித்த நீர் என்ற நான்கு வகையான திரவங்கள் காணப்படுவதாகவும், இவற்றுள் ஏதாவது ஒன்று கூடிக்குறையும்போது நோய் ஏற்படும் என்ற கிரேக்கர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டார்.

இதனை உலக மக்களும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொண்டனர். 16ஆம் நூற்றாண்டில் இறந்தவர்களின் உடலை வைத்து ''அனாடமி'' படிக்க வாய்ப்பு கிடைத்தது. இதனையடுத்து இதயத் துடிப்பு, இரத்த ஓட்டம் பற்றிய உலகின் தவறான கருத்துக்கள் 1628ஆம் ஆண்டளவில் வில்லியம் ஹார்வே என்ற விஞ்ஞானியால் தகர்க்கப்பட்டது. தன் உடலில் இதயம் துடிப்பதை மனிதன் முதன் முதல் உணர ஆரம்பித்தான்.

பக்றீரியாக்களில் இருந்து மனிதனைக் காப்பாற்றும் தடுப்பு மருந்தை லூயி பாஸ்ட்ச்சர்கண்டு பிடித்ததால். மனிதனுக்கு முதல் முறையாக 'பக்றீரியாக் கவசம்' கிடைத்தது. இதே கால கட்டத்தில் ஆனஸ் தீஸியாவும் கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து நோயாளிகளின் வீடுகளில் நடந்து வந்த பல அறுவைச் சிகிச்சைகள் மருத்துவமனைகளுக்கு இடம் மாறின.

19ஆம் நூற்றாண்டில் பெண்களின் இதயத் துடிப்பை அவர்களது மார்பில் காதை வைத்து 'ரெனே' என்ற வைத்தியர் கூச்சம் கொண்டதன் விளைவாக ஸ்டெதோஸ்கோப் (**Stethescope**) கண்டு பிடிக்கப்பட்டது. பின்பு கலிலியோ கண்டு பிடித்த தெர்மாமீட்டர் புதுவடிவம் எடுத்தது. இதனையடுத்து என்டோஸ்கோப் வந்தது. இவற்றுக் கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் 1928ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் பிளமிங் கண்டு பிடித்த அன்டி பயாடிக் பென்சிலின் நோய்களை எதிர்த்துப்போட்டியிட மனிதனுக்கு ஒரு ஆயுதத்தைக் கொடுத்தது.

இதன்பிறகு **E.C.G.** ஸ்கேனர் போன்ற சாதனங்கள் வந்தன. கிட்னி மாற்றம் முதல் இருதய மாற்றம் வரையான அறுவைச் சிகிச்சை களும் சோதனைக்குழாய் குழந்தை முதல் க்ளோனிங் வரை மருத்துவம் அபாரவேகத்தில் முன்னேறியது இன்றும் முன்னேறுகின்றது.

ஒவ்வொரு முறை புதிய மருந்துகளை கண்டு பிடிக்கும்போது அது வேலை செய்கிறதா? இல்லையா? என்று பரிசோதிப்பது சிரமமான காரியம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மூலிகைகளைக் கொண்டு வியாதிகளைக் குணப்படுத்தும் முறையை இந்தியா கற்றிருந்தது. 'அனாடமி' பற்றிய விளக்கங்களையறியாமலேயே அவர்கள் பல அறுவைச் சிகிச்சைகளைக் கூட கற்றிருந்தார்கள். ஏன் பிளாஸ்ரிக் சர்ஜரிகூட செய்திருக்கிறார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான மருத்துவ வழிமுறைகள் தான் தற்போதுள்ள மருத்துவ முறைகள் என்று கூறினாலும், இன்றைய மருத்துவ முறைகள் நவீன வசதிகள் பெற்று, பழைய முறைகளிலிருந்து வேறுபட்டும், வடிவங்கள் மாற்றமடைந்தும் தனித்துவமாக மிளிர்ந்து கொண்டு இருக்கின்றது என்றே கூறமுடியும்.

# இரும்பு துருப்பிடிக்க அதிலுள்ள காபனே காரணம்

இரும்புடன் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் குரோமியம் சேர்த்து செய்யப்படுவது உருக்கு இரும்புடன் கார்பன் சேர்த்து எஃகு செய்யப்படுகிறது. அதனால் அது உறுதி அடைகிறது.

ஹாரி பிரியர்லி என்ற ஆங்கிலேயரால் முதல் உலகப் போருக்கு முன்பு துருப்பிடிப்பதற்கு இரும்பிலுள்ள காபன்தான் காரணம் என்பதை கண்டு அறிந்தார்.

ஆனால், கார்பன் சேர்க்காமல் எஃகு செய்ய முடியாது. பல சோதனைகளைச் செய்து பார்த்து கார்பன் அளவைக் குறைத்து குரோமியம் அளவைக் கூட்டினால் துருப்பிடிக்காமல் இருக்கும் என்பதைக் கண்டார்.

கார்பனை ஒரேயடியாகவும் குறைத்துவிட முடியாது. குரோமியத்தை அதிகமாகவும் சேர்த்துவிட முடியாது. அதிகமாக சேர்த்தால் எஃகு உடையும் தன்மையுடையதாகிவிடும்.

பாதிப்பு இல்லாமல் சரியான விகிதத்தில் இரண்டையும் சேர்க்கும் வழியை அவர் கண்டறிந்தார். உறுதியும் குறையாமல் துருவும் ஏறாமல் இப்போது செய்யப்படுகின்றது. பல பணிகளுக்கும் அது பயன்படுகின்றது. உடலுக்குள் பொருத்தக் கூடிய அளவிற்குப் பாதுகாப்பானதாகவும் இருக்கின்றது.

# முத்து உற்பத்தி

முத்து எப்படி உருவாகின்றது?

*சிப்பிக்குள் மண் துகளோ மழைத்துளியோ புகுந்து உறுத்துவதால், உறுத்தும் பொருளை மூடும் வகையில் சிப்பி ஒரு திரவத்தைச் சுரக்கின்றது. இத் திரவம் அடுக்கு மேல் அடுக்காகப் படிந்து கடினப்பட்டு முத்தாக உருவெடுக்கின்றது.*

*ஒரு சராசரி முத்து உருவாகுவதற்கு ஏழாண்டுகள் எடுக்கின்றது. ஆனாலும் இந்த வகையில் முத்து உருவாகுவது அபூர்வமே என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.*

*இயற்கையாகத் தோன்றிய முத்து ஒன்றைப் பெறுவதற்கு ஆயிரக் கணக்கான சிப்பிகளை உரித்து பார்க்க நேரிடுகின்றது. இதனால் தான் ஒவ்வொரு சிப்பிக்குள்ளும் ஒரு முத்து விளைய வேண்டும் என்பதற்காக சிப்பி வளர்ப்பு முறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.*

*சிப்பிகளை வலுக்கட்டாயமாகத் திறந்து அதனுள் துகள் ஒன்றைப் போட்டுவிடப்படுகின்றது. இதன்போது சிப்பி திரவத்தை சுரக்கின்றது. ஏழாண்டுகள் கழித்து, சிப்பிக்குள்ளிருந்து முத்து எடுக்கப்படுகின்றது.*

# அத்திலாந்திக் கடலை பலூனில் பறந்து சாதனை

சாகச வீரர் உலகிலேயே முதன் முறையாக பறக்கும் பலூனைப் பயன்படுத்தி அத்திலாந்திக் கடலைக் கடந்து சாதனை படைந்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டவரான டேவிட் அமர் ஆடம்ஸ் (வயது-46) பிரமாண்டமான பறக்கும் பலூனில் பறந்து அத்திலாந்திக் கடலைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இவர் இந்த சாதனையை செய்வதற்காக பல தடவைகள் முயற்சி செய்து வந்தார். இரண்டு முறை தோல்விகளைத் தழுவிய அவர் மூன்றாவது முறையாக இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி அன்று இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

பல தடவைகள் முயற்சி மேற்கொள்ளும்போது திரும்பவும் வீடு போய்ச் சேருவேனா என எண்ணியதாகவும் அவர் கூறியதுடன், பலத்த சிரமங்களுக்கு மத்தியில் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

# நவீன நாற்காலி

மூளையின் உத்தரவிற்கு ஏற்ப செயற்படும் நவீன சக்கர நாற்காலியை சுவிஸ்லாந்து, ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். நோயாளிகள் சக்கர நாற்காலியை தமது கைகளால் இயக்க வேண்டும் அல்லது மற்றவர் தள்ளிச் செல்லவேண்டும்.

தற்போது நவீன சக்கர நாற்காலியை சுவிஸ்லாந்து, ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இது மனித மூளையின் உத்தரவிற்கு ஏற்ப செயற்படும். சக்கர நாற்காலியில் அமரும் ஒருவர் தலையில் ஒரு தொப்பி அணிய வேண்டும். அந்தத் தொப்பியில் எலக்ட்ரானிக் கருவிகள் இருக்கும். அது மூளையின் கட்டளையை வயர்லெஸ் மூலம் கணினிக்கு அனுப்பும். கணினி பிறப்பிக்கும் கட்டளையை ஏற்று சக்கர நாற்காலி இயங்கும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள்.

# உடலின் அனைத்து பகுதியும் புகைத்தலால் பாதிப்படையும்

புகைத்தல் ஒரு சில உறுப்புக்களை மட்டுமல்லாமல் முழு உடலிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

உடலியல், உளவியல், சுகாதாரத்திற்கு முக்கியமான இரசாயன பதார்த்தங்கள் குறைவாக சுரப்பதற்கு புகைத்தல் பழக்கம் வழிவகுப்பதாக அமெரிக்கா ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். புகைத்தலினால் நுரையீரல், இதயம், நாடி, நாளங்கள் என்பனவே பாதிப்பதாக நம்பப்பட்டாலும் புகைத்தல் உடல் முழுவதையும் பாதிப்பதாக தச் எனப்படும் ஸ்கானிங் முறையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

# மிதக்கும் பாலைவனம்

அத்திலாந்திக் பெரும் கடலின் நடுப்பகுதியில் அமைந்துள்ள சாகாசோ (**Sargasso**) கடலை மிதக்கும் பாலைவனம் என்று அழைக்கப்படுகின்றது. இதில் பிளாங்க்டன் (**Plankton**) எனப்படும் மிதக்கும் பாசி உயிரினம் ஏராளமாக இருந்தாலும் விற்பனைக்கு ஏற்ற மீன் எதுவும் இங்கு கிடைப்பதில்லை. சர்காசம் (**Sargassum**) எனும் கடல்பாசி ஏராளமாக விளைகின்றது. இதனால்தான் கடலுக்கு மிதக்கும் பாலைவனம் என்று பெயரிட்டுள்ளார்கள். முட்டை வடிவமான இந்தக் கடல் வலஞ்சுழியாக நகர்கின்றது. இதன் தண்ணீர் தெளிவானது. நீல நிறமான இந்தக் கடலின் பரப்பளவு 30 இலட்சம் சதுர கிலோ மீற்றர் ஆகும்.

# தெரிந்துகொள்ள....

- உலகில் முதன் முதல் லிப்ட் அமைக்கப்பட்டது அமெரிக்காவில் தான். லிட்வின் எனுமிடத்தில் 1850இல் அமைக்கப்பட்டது.
- உலகில் முதன் முதல் தண்ணீரில் குளோரின் கலக்கும் முறையை 1918இல் அறிமுகப்படுத்தியவர்கள் எபல் வோல்மேன் (Abel Wolman)லின் என்ஸ்லோ (Lin Enslow) எனும் விஞ்ஞானிகள் தான். இவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள்.
- உலகில் முதன் முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி சர்வதேச அளவில் 1859இல் விளையாடப்பட்டது. இதில் அமெரிக்க அணியும் பிரிட்டனும் மோதின.
- உலகில் உயில் (Will) எழுதும் முறையை அறிமுகப்படுத்தியவர் சிசிலி நாட்டு மன்னர் ரோஜர். 1102இல் எழுதப்பட்டது.
- ஐரோப்பாவில் மிகவும் குளிரான நாடு நோர்வேதான். இங்கு பகலிலும் தெருவிளக்குகள் எரியும். இந்த நாட்டில் அனைவரும் பணக்காரர்கள். 45 இலட்சம் மக்களே வாழ்கின்றனர்.
- மூங்கில்களில் 1000 வகைகள் உண்டு.
- பிலிப்பைன்ஸ் 7100 தீவுகளைக் கொண்டதாகும்.
- இந்திய மாநிலங்களில் கேரளாவில் மட்டும் 03 சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.
- மோனா லீஸா ஓவியம் வரைந்து முடிக்க 3 ஆண்டுகள் பிடித்ததாகக் கூறப்படுகிறது.



# பறக்கும் பாம்பு

நமது நாட்டில் காணப்படும் பாம்பு வகைகளில் பறக்கும் பாம்பு என்றும், தங்க, மரப்பாம்பு என்றும் அழைக்கப்படும் ஒருவகை இனமும் காணப்படுகின்றது. கொலுப் ரீடே இனத்தைச் சேர்ந்த இப்பாம்பின் தலை தட்டையானதாகக் காணப்படுகிறது. சிறிய உடலமைப்பைக் கொண்ட இதன் வாலின் நீளம் அதன் மொத்த நீளத்தில் காற்பங்காகும். தென்னம் பூக்களைப் போன்ற அமைப்பில் சிவப்பு நிறத்திலான பூ அலங்காரம் ஒன்று அதன் மேற்புறத்தில் காணப்படுவதால் இதற்கு பூ வண்ணம் என்றும் பெயருண்டு.

பெரும்பாலும் இப்பாம்புகள் தென்னை மரங்களில் காணப்படுவதாலும் தென்னம் பூக்களைப் போன்று முதுகுப் புறத்தில் சிவப்பு வடிவங்கள் காணப்படுவதாலும் 'தென்னம் பூ கருவலை' எனவும் அழைக்கப்படும்.

இவ்வகைப் பெயர்கள் புராதன விசக்கடி வைத்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை உலகிற்கு முதலில் சீபா என்பவர் 1734ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். எனினும், இலங்கையில் பர்கூஸன் என்பவர் விஞ்ஞான ரீதியாக ஆவணப்படுத்தியது 1877இல் ஆகும். பின்னர் இந்தியாவிலும், இலங்கையிலும் காணப்படுபவற்றை இனங்கண்டு வேறுபடுத்தி 1953ஆம் ஆண்டு 'க்ரைசாபெலியா ஓர்னாடோ சிங்களயா' எனப் பெயரிட்டுள்ளனர்.

எம்மால் சாதாரணமாக அழைக்கப்படும் 'கண்டம் கருவலை' இனத்தைச் சேர்ந்தவையாக இல்லாவிடினும் இவ்வகைப் பாம்புகள் விஷம் கொண்டவை. கடல் மட்டத்திலிருந்து 1500 அடிக்கு மேற்பட்ட பிரதேசங்களில் காணப்படும் இவை மர உச்சிகளிலேயே சீவிக்கும். இவை மேலிருந்து பாயக்கூடியவையாதலால் பறக்கும் பாம்பு எனப்படுகிறது.

# யுத்தமோ, சமாதானமோ முடிவுறவில்லை இடை நிறுத்தப்பட்டேயுள்ளன

## தமிழ்க்கூட்டமைப்பு பா.உ. சந்திரநேரு

(அம்பாறை செய்தியாளர்)

**யுத்தமோ சமாதானப் பேச்சுவார்த்தையோ முடிவுற்று விடவில்லை, இடைநிறுத்தப்பட்டேயுள்ளன. இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு கூறினார்.**

கல்முனை ஸ்ரீமாமாங்க வித்தியாலயத்தில் . வியாழக்கிழமை நடைபெற்ற நாமகள் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் டானியல் பென்ஜமின் தலைமையில் நடைபெற்ற விழாவின் போது புதிய நூலகமொன்றும், புதிதாக அமைக்கப்பட்ட கூட்ட மண்டப மேடையும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

விழாவில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.காதர் இப்ராகீம், மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.கே. ஆனந்தராஜா, கல்முனை தமிழ் கோட்டக்கல்வி அதிகாரி திருமதி.கே.தயாசீலன், உதவிக்கல்விப் பணிப்பாளர் வ.சுப்பிரமணியம் உட்பட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தொடர்ந்து உரையாற்றுகையில்;

"யுத்தம் முடியவில்லை, இடை நிறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் சமாதானப் பேச்சுவார்த்தையும் முடிவுறவில்லை. அதுவும் இடை நிறுத்தப்பட்டேயுள்ளது.

எனவே யுத்தம் இந்த நாட்டில் மீண்டும் ஆரம்பிக்கலாம் அல்லது நல்ல நிலைமை ஒன்றும் தோன்றலாம்.

எனவே எத்தகைய நிலை தோன்றினும் நமது தமிழ் மக்கள் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட ஒன்று திரளவேண்டும்.

எமது மக்களையும், விடுதலைப் புலிகளையும் எவரும் எளிதில் ஏமாற்றிவிட முடியாது.

அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்காவையும், இந்தியாவையும் இந்த நாட்டுக்குள் ஏன் கொண்டுவந்துள்ளாரென்பதை நாம் புரியாமலில்லை. யுத்தம் ஒன்று மீண்டும் ஆரம்பமாகுமானால் அதற்கான உதவிகளைப் பெறவேண்டுமென்பதற்காகவே இந்த சூட்சுமம் கையாளப்பட்டுள்ளது.

இதை நாம் அறியாதவர்களல்ல, எம்மை இனி ஒருபோதும் ஏமாற்றி விட முடியாது.

உலகில் இன்று சமாதானத்திற்கு எதிராகப் பேரணி ஒன்று நடந்துள்ளதென்றால் அது ஜே.வி.பி.யினர் நடத்தும் பேரணி ஒன்றே தான்.

ஜே.வி.பி.யினரின் கம்யூனிஸ்ட் சித்தாந்தம் இன்று உலகில் விரட்டியடிக்கப்பட்ட ஒன்றாகும்.

அவர்கள் இங்கு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற நப்பாசையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தான் ஆட்சிக்கு வந்தால் நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிப்பேனெனக் கூறிக்கொண்டு வந்த சனாதிபதி சந்திரிகா இன்று சமாதானத்திற்குத் தீ வைத்துக் கொளுத்திக் கொண்டிருக்கின்றார்.

இதனால்தான் இன்று சமாதானத்திற்கு எதிரான ஜே.வி.பி.யினரின் பாத யாத்திரையில் பொதுசன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் முக்கிய பங்கு கொண்டு வருகின்றனர்.

தமது கொள்கைக்கு எதிராக இன்று சிங்கக் கொடிகளை ஏந்திக் கொண்டு பாதயாத்திரை செல்லும் ஜே.வி.பி.யினர் யாழ்ப்பாணத்திற்கோ மட்டக்களப்பிற்கோ நேரில் வந்து உண்மை நிலைமைகளைப் பார்த்து உணர்ந்தவர்களல்ல.

இவர்கள் நாளை தம் சுயலாப அரசியலுக்காக சிங்கக்கொடியை விட்டு வேறு என்ன கொடிகளைத் தூக்குவார்களோ தெரியாது என்றார்.(23)

## யுனெஸ்கோ கூட்டத்தில் ஐவர் கொண்ட சிறி. குழு

(லண்டன்)

பிரான்சில் நடைபெறும் "யுனெஸ்கோ" அமைப்பின் பொதுச் சபைக் கூட்டத்தில் சிறிலங்காவின் ஐவர் கொண்ட குழு பங்கு பற்றவுள்ளது.

ஐ.நா. சபையின் கல்வி, விஞ்ஞானம் கலாச்சாரப் பிரிவின் பொதுச்சபைக் கூட்டத் தொடர் பிரான்சின் தலைநகர் பாரிசில் கடந்த திங்கட் கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கொரு முறை நடைபெறும் இக்கூட்டத்தில் 166 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 200 அமைப்புக்கள் உள்ளிட்ட 3000 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத் தொடர் வரும் 17ஆம் திகதி முதல் பல்வேறு அமர்வுகளாக வெவ்வேறு தலைப்புகளின் கீழ் நடைபெறுகின்றது.

## ஆனையிறவு உப்பளப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம்

(அலுவலக செய்தியாளர்)

குறிஞ்சாத்தீவு உப்பளப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உப்பளப் பின் பகுதியில் இனந்தெரியாத முதியவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 65 வயது மதிக்கத்தக்க இவர் கறுப்பு ரீ-சேட்டுடனும் பச்சை நீல நிறங்கள் கலந்த செக்சாறமும் அணிந்திருந்தார். இவரின் இறப்பு சம்பவித்து சுமார் 20 நாட்கள் இருக்கலாம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.இந்நிலையில், கிளி. மாவட்ட நீதிமன்ற நீதியாளர் மற்றும் கிளி. மாவட்ட மருத்துவமனை மருத்துவர் ஆகியோர் முதியவரின் சடலத்தைப்பார்வையிட்டதை அடுத்து நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பளை காவல் பணிமனையினரால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. (லோ)

## முல்லை. மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு இன்று

. முல்லை. மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இன்று காலை 09.00 மணி தொடக்கம் மாலை 10.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பெண் பிரதிநிதிகள், கல்விசார் பெண்பிரதிநிதிகள், வைத்திய பிரதிநிதிகள், மற்றும் விவசாய அமைப்புக்களின் பெண் பிரதிநிதிகள், மாணவ அமைப்புக்களின் பெண் பிரதிநிதிகள், வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மாவட்ட பெண் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்ட அனைத்து மாதர் சங்கப் பிரதிநிதிகள் என ஆயிரம் பெண்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் அரங்காற்றுகை நிகழ்வு, கருத்தரங்குகள், சிறப்புரைகள், குழுநிலை ஆய்வுகள் என்பன நடைபெறும். இறுதியாக முல்லை. மாவட்ட பெண்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கிறது. வேலைத் திட்டங்கள் தொடர்பான தீர்மானமும் நிறைவேற்றப்படவுள்ளது. இறுதியாக கலை நிகழ்வுகளுடன் நிறைவடையும்.

## முறிகண்டியில் சிறுவர்தின நிகழ்வு

திருமுறிகண்டி முன்பள்ளி மண்டபத்தில் உலக சிறுவர்தின நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு முன்பள்ளி ஆசிரியை வனஜா தலைமை வகித்தார். தமிழீழத் தேசியக் கொடியை திருமுறிகண்டி அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏற்றிவைத்தார். இந் நிகழ்வில் சிறுவர்களின் பாட்டு நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது. சிறுவர்களுக்கு பரிசுவழங்கி கௌரவிக்கப்பட்டது.

## சிரமதானம்

முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் நினைவாக புத்துவெட்டுவான் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் கிராம சேவையாளரின் ஒத்துழைப்புடன் புத்துவெட்டுவான் மங்கை முன்பள்ளி வளாகமும் அதன் சுற்றுப்புறங்களும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

கடந்த 30ஆம் திகதி துணுக்காய்ப் பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் செல்வி. மதிநிலாவின் ஒழுங்கு படுத்தலில் இடம் பெற்ற இச்சிரமதானத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (24)

## சிறுமியை காணவில்லை

விளையாடிக் கொண்டிருந்த சிறுமி ஒருத்தியை கடந்த நான்கு நாட்களாகக் காணாததினால் மானிப்பாய்ப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவுகின்றது.

கடந்த 27 ஆம் திகதி காலை தனது வீட்டுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த சுதுமலை கிழக்கு மானிப்பாயைச் சேர்ந்த பத்து வயதுடைய இந்திரன் டயானா என்ற சிறுமியே காணாமற் போயுள்ளார். இது தொடர்பாக பதற்றமடைந்த சிறுமியின் பெற்றோர் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.(33)

## பதிவு செய்யக் கோரிக்கை

போரின் அனர்த்தத்தினாலோ, பிற விபத்துக்களாலோ வெளித்தோலில் ஏற்பட்ட தழும்பிற்கான பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வவுனியாவில் நடைபெறவுள்ளது. இதுவரை தம்மைப் பதிவு செய்யாதவர்கள் 06.10.2003 இற்கு முன்பாக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறும், ஏற்கனவே பதிவு செய்தவர்கள் பயண ஆயத்தங்களுடன் 2003.10.07 செவ்வாய் காலை 9 மணிக்கு வைத்தியசாலைக்கு வருகை தருமாறும் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவிக்கின்றார்.

## முக்கிய சந்தேக நபர் போலிசாரால் கைது

(கொழும்பு)

தென்மாகாண அமைச்சர் எம்.கே. றஞ்சித்தின் கொலை தொடர்பாக முக்கிய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சிறிலங்காப்பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர் தீவிரவிசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை புனரமைக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவை அவசர புனரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் வெற்றிடமாகவுள்ள ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரை நியமிக்கக் கோரியும் அது தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் அவசரமாகக் கொண்டு வரவும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக பல இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடரப்பட்டுள்ளதால் அதனை மறைப்பதற்காகவே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியிருந்தார். (32)

## சிறில. சனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப்பிரேரணை

### -ஐ.தே.பா.உ.கள் கோரிக்கை

சிறிலங்கா சனாதிபதிக்கெதிராக அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்தக் கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதியின் சமீபகால செயற்பாடுகள் அரசாங்கத்தைப் பலவீனப் படுத்துவதுடன் அது நாட்டின் தேசிய நலனுக்கும் ஆபத்தாக இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகத் தாம் பரிசீலிப்பதாகவும் முன்னணி அமைச்சர்கள் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் பேசவிருப்பதாகவும் பிரதமர் அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

## 29 ஆவது தேசிய விளையாட்டு விழா குருநாகலுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த சிறிலங்காவின் 29-வது தேசிய விளையாட்டு விழா குருநாகலுக்கும் கொழும்பிற்கும் மாற்றப்பட்டுள்ளன.யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 30ஆம் திகதி இந்த விளையாட்டு விழா ஆரம்பமாக விருந்தது.

குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படாத நிலையில் சர்வதேச நாடுகளுக்கான பிரச்சார ரீதியில் இந்த விளையாட்டு விழா நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்தே விளையாட்டு விழா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொங்கு தமிழ் அலுவலகம் மன்னாரில் திறப்பு

(மன்னார்)

மன்னாரில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ்நிகழ்வை முன்னிட்டு பொங்குதமிழ் அலுவலகம் ஒன்று தலைமன்னாரில் திறந்து வைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.(மி)

## வீடு தீப்பிடித்ததால் பொருட்கள் அழிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் வீடொன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

மேற்படி வீட்டின் பின்புறமாக தீப்பிடித்து பெரும் தீயாக மூண்டு கூரைப்பகுதி எரிய ஆரம்பித்தது. இவ்வாறு வீடுதீப்பற்றி எரிவதை கண்ணுற்ற அயலவர்கள் ஒன்றுதிரண்டு வீட்டில் பற்றிய தீயை கடும்



முயற்சியின் மத்தியில் அணைத்துள்ளனர். வீட்டில் எவரும் தங்கியிராததன் காரணத்தால் எந்தவித உயிரிழப்புகளும் நிகழவில்லை. எனினும் வீட்டினுள் இருந்த ஒருசில பொருட்களைத் தவிர பெருமளவான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளது. காரை நகரைச் சொந்த இடமாகவும், கிளிநொச்சி ஜெயந்திநகரை தற்போதைய முகவரியாகவும் கொண்ட . வே.செல்வராஜா என்பவரது வீடே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது. வீடுதீப்பிடித்ததால் மேற்படி வீட்டு உரிமையாளருக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (லோ)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி [தீட்டல் பச்சை] வழங்கலுக்கான

## கேள்வி கோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003, ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான தீட்டல் பச்சை அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை தீட்டல் பச்சை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரையுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப் பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகளின் அளவு மாற்றங்கள் அந்தந்த மாதங்களில் அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003, ஒக்டோபர் (MT) | 2003, நவம்பர் (MT) | 2003, டிசம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 56 | 56 | 56 |
| 02 | கைதடி | 27 | 27 | 27 |
| 03 | கோடிகாமம் | 50 | 50 | 50 |
| 04 | உடுப்பிட்டி | 12 | 12 | 12 |
| 05 | கட்டைவேலி, நெல்லியடி | 17 | 17 | 17 |
| 06 | பருத்தித்துறை | 45 | 45 | 45 |
| 07 | புலோலி | 10 | 10 | 10 |
| 08 | மருதங்கேணி | 31 | 31 | 31 |
| 09 | யாழ்ப்பாணம் | 123 | 123 | 123 |
| 10 | நல்லூர் | 64 | 64 | 64 |
| 11 | அச்சுவேலி | 57 | 57 | 57 |
| 12 | நீர்வேலி | 55 | 55 | 55 |
| 13 | மானிப்பாய் | 48 | 48 | 48 |
| 14 | பண்டத்தரிப்பு | 36 | 36 | 36 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 26 | 26 | 26 |
| 16 | தெல்லிப்பளை | 55 | 55 | 55 |
| 17 | சங்கானை | 72 | 72 | 72 |
| 18 | சுன்னாகம் | 73 | 73 | 73 |
| 19 | புங்குடுதீவு நயினாதீவு | 16 | 16 | 16 |
| 20 | வேலணை | 19 | 19 | 19 |
| 21 | ஊர்காவற்றுறை | 26 | 26 | 26 |
| 22 | காரைநகர் | 21 | 21 | 21 |
| 23 | தீவகம் | 04 | 04 | 04 |
| 24 | நெடுந்தீவு | 11 | 11 | 11 |
| | **மொத்தம்** | **954** | **954** | **954** |

2. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/- வினை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்வி படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003-10-03ஆம் திகதி தொடக்கம் 2003-10-16ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா. மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

3. மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/-ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி, அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி தீட்டல் பச்சை அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

5. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம். யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003-10-17 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

6. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

7. கேள்வி காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

8. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 % மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக- Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

**செ. பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**2003.10.02**

(சி-8635)

க.பொ.த.உ/த பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற

# நாற்பது மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கத்திட்டம்

(கொழும்பு)

க.பொ.த.உயர்தர பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப்பெற்ற 40 மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவேண்டுமென கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பௌதீகம்,வர்த்தகம்,உயிரியல் ஆகியபாடங்களில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கே தங்கப்பதக்கங்களும், சான்றிதழ்களும வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களும் பாராட்டப்படவுள்ளனர்.

# சிங்கள மாணவர் சமாதான சுற்றுலா

(மன்னார்)

சமாதான சுற்றுலாவை மேற்கொண்டு காலி மாவட்டத்தைச் சேர்ந்த 125 சிங்கள மாணவர்கள் மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சூழல் பாதுகாப்பு நிலையம் இவர்களுக்கான சுற்றுலா ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளது.

இவர்கள் மன்னாரில் உள்ள அகதி முகாம்கள், பாடசாலைகள் போன்றவற்றுக்கு விஜயம் செய்வதுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்வுகளிலும் கலந்து கொள்கின்றனர். (மி)

# விசேட பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழகங்களுக்கான புகுமுக மாணவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து புகுமுக மாணவர்களையும் தவறாது சமுகமளித்துக் கொள்ளுவதுடன், தங்களது பதிவுகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# விவசாய உள்ளீடு வழங்கல்

ஸ்பானிய செஞ்சிலுவைாசங்க உதவித்திட்டத்தின்கீழ் இலங்கை செஞ்சிலுவை சங்கம், தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் பின்வரும் இடங்களில் விவசாய உள்ளீடுகளைப் பயனாளிகளுக்கு வழங்க இருக்கின்றது. இன்று பூநகரி செட்டியகுறிச்சி, ஞானிமடத்திலும், வரும் 7ஆம் திகதி பரந்தன் சென்.அன்ரனிஸ் தேவாலயத்திலும், 8ஆம் திகதி கோயில் வயலிலும், 10ஆம் திகதி உருத்திரபுரம் வடக்கிலும் , 11ஆம் திகதி ஸ்கந்தபுரத்திலும், 14ஆம் திகதி பெரியபரந்தனிலும், 15ஆம் திகதி பரமன்கிராய் பூநகரியிலும் 16ஆம் திகதி பள்ளிக்குடாவிலும், 17ஆம் திகதி மட்டுவில்நாடு கிழக்கு. மேற்குபகுதிகளிலும் வழங்கப்படவுள்ளது.


# சேரன் வாணிபம்

## பணிநிலை வேண்டுகை

**பணிநிலை:- ஓட்டுநர்**

**தகைமைகள்: -**

- ☆பாரஊர்தி ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ☆பாரஊர்தி ஓட்டுவதில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் தேவை.
- ☆வன்னி பெருநிலப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- ☆ஆண்டு ஒன்பது (09) வரையில் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
- ☆வயது 25-40 இற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த தகைமையுடையோர் பின்வரும் ஆவணங்களுடன்

☆தேசிய அடையாள அட்டை
☆குடும்பஅட்டை ☆பிறப்புச்சான்றிதழ்

**08.10.2003 நாள் காலை 10.00 மணிக்கு கண்டிவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சேரன் வாணிபம் நடுவப்பணிமனையில் நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

**குறிப்பு:-**
ஊதியத்திட்டம் தொடர்பாக நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**ஆளுகை**
**சேரன் வாணிபம்,**
**நடுவப்பணிமனை,**
**கிளிநொச்சி.**

(சி-8633)


# கண்ணீர் அஞ்சலி

**அமரர் திரு. கிறிஸ்ரி ஸ்ரனி ஜெயகானந்தன்**
**பட்டதாரி ஆசிரியர்**
**மன் /இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை மடு**

பிறப்பு :- 06.09.1974 இறப்பு:- 01.10.2003

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு கிறிஸ்ரி ஸ்ரனி ஜெயகானந்தன் 01.10.2003 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் திடீர் மறைவுச் செய்திகேட்டு நாம் அதிர்ச்சியும் பெருந்துயரும் அடைந்துள்ளோம். இவரின் திடீர் மறைவால் உளம் கலங்கி நிற்கும் அன்னாரின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதோடு அன்னாரின் ஆன்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

அவர் பிரிவில் துயருறும்
**அதிபர்,**
**ஆசிரியர்கள்,மாணவர்கள், அ.ச.**
**மன் /இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை.**

(3818)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-10-2003

## அரசின் செயலே தீர்மானிக்கும்

"விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டவரைவு தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் பல விடயங்களில் இணக்க மின்மை ஏற்படலாம்" என்ற பேராசிரியர் பீரிஸ் அவர்களின் எதிர்வு கூறலானது ஒன்றும் மகத்தான கண்டுபிடிப்பல்ல, இது அனைவராலும் எதிர்பார்க்கப் படுவதே.

ஏற்கனவே அரசாங்கம் சமர்ப்பித்த திட்டவரைவில் இருந்து புலிகளின் திட்டவரைவு பல விடயங்களில் வேறுபாட்டைக் கொண்டதாக இருக்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழ் மக்களின் நெருக்கடிக்குத் தீர்வு காணக் கூடியதான முழுமையான அதிகாரங்களைக் கொண்டதாக இடைக்கால நிர்வாகசபை இருப்பதாக இத்திட்ட வரைவு உறுதி செய்யும் என்பதை நிச்சயமாக எதிர்பார்க்கலாம். விடுதலைப்புலிகள் தரப்பும் இதனை வெளிப்படையாக வலியுறுத்தியே வந்துள்ளது.

ஆகையினால், அரசாங்கம் சமர்ப்பித்த யோசனைகளில் இருந்து பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளதாகவே இது நிச்சயம் இருக்கும்: ஆனால் இது எதிர்பார்க்கப்படாததொன்றல்ல. இதேவேளை, விடுதலைப்புலிகள் முன்வைக்கும் இத்திட்ட வரைவை அரசாங்கம் நிராகரித்துப் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொள்ளும் என்றோ, தாமதிக்கும் என்றோ எதிர்பார்ப்பதற்கும் இல்லை. ஏனெனில் பேச்சுவார்த்தைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்படுதல் என்பது, அரசாங்கத்திற்கு அவசியமான தொன்றாகவே உள்ளது.

மேலும், புலிகள் திட்ட வரைவினைச் சமர்ப்பித்ததும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கத் தரப்பும், நோர்வேத் தரப்பும் அண்மையில் தெரிவித்திருந்தமை புலிகளின் இடைக்கால திட்ட வரைவிற்காக அவை காத்திருக்கின்றமையையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. திட்ட வரைவில் எது இருப்பினும் அவற்றைப் பேச்சுவார்த்தை மேசையில் பேசிக் கொள்ளவே அரசாங்கம் விரும்புகின்றதெனலாம்.

அரசாங்கத்தின் இத்தகைய அவசரத்திற்கும் காரணம் இல்லாமல் இல்லை. டோக்கியோ மாநாட்டில் உறுதியாக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியாவது உடமையாகப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை உள்ளது. அதிலும் குறிப்பாக அடுத்த ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படுவதற்கு முன்பாக இந்நிதி தேவையாகவுள்ளது. அவ்வாறு நிதியுதவி பெறப்படாது விட்டால் அரசாங்கம் தனது ஸ்திரநிலையைப் பேணுவதென்பது கடினமானதொன்றாகிவிடும்.

ஏற்கனவே தொழிற் சங்கங்கள சம்பள உயர்வும், வசதிகளும் கோரி ஒன்றன்பின்ஒன்றாகப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளன இன்னும் பல தொழிற்சங்கங்கள் போராட்டம் குறித்து எச்சரிக்கையினை விடுத்திருக்கின்றன. அதேவேளை, இப் போராட்டங்களை எதிர்க்கட்சிகள் முன்னின்றும் நடத்திவருகின்றன.

ஆகையினால் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிப்பதில் கரிசனையாகவே உள்ளது. ஆனால் இப்பேச்சுவார்த்தைகள் எவ்வாறு வேகமாக ஆரம்பிக்கப்பட்டாலும் இதில் முன்னேற்றம் காண்பதென்பது அரசாங்கம் கைக்கொள்ளப்போகும் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான நிலைப்பாட்டைப் பொறுத்ததாகவே இருக்கும். அதாவது அரசாங்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பானது ஒற்றையாட்சியமைப்பிற்குட்பட்டதாகவே இருக்கும், இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் – அதற்கு அப்பாற்பட்ட யோசனைகள் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாக மாட்டாது எனக் கூறுமானால் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காண்பதென்பதும், இடைக்கால நிர்வாகசபை அமைத்தல் என்பதும் சாத்தியமற்றதொன்றாகிவிடும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இன்றைய அரசியல் யாப்பில் ஆட்சியாளர்கள் தாம் விரும்பிய எதனையும் மேற்கொள்ளலாம். என அரசியல் சட்ட வல்லுனர்கள் கூறுகின்றார்கள். அதாவது யுத்தநிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதுபோல், அரசாங்கம் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை உருவாக்கினும் அதனை இவ் அரசியல்யாப்பு அமுலில் இருக்கையில் கூடச் சாத்தியமாகும் என்பது சட்டவல்லுனர்களின் கருத்தாகும்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது மட்டுமல்ல, அரசியல் யாப்பிற்கு வெளியில் நின்று இவ் இடைக்கால நிர்வாகசபைக் கட்டமைப்பைப்பற்றிப் பேசுக்களை நடத்தவும் தயாராக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில், இப்பேச்சுவார்த்தையிலும் முன்னேற்றம் காண்பதென்பது சாத்தியப்பாடற்றதொன்றாகவே இருக்கும்.

இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தமது பலமான கண்டனங்களையும், எதிர்ப்பையும் வெளிக்காட்டக் கூடும் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. ஆனால், இவ் எதிர்ப்புக்களுக்கு அரசாங்கம் பணிந்து போகுமானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு நோக்கிய நடவடிக்கைகளில் மட்டுமல்ல, சிறிலங்காவின் பொருளாதாரம் சந்திக்கும் நெருக்கடியில் இருந்தும் விடுபடுதல் என்பது இயலாததொன்றாகவே இருக்கும். ஆகையினால், இடைக்கால நிர்வாகசபை குறித்து அரசாங்கம் எடுக்கும் நிலைப்பாடே இனப்பிரச்சினைக்குத் தீர்வை நோக்கியும், சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு நோக்கியும் அரசாங்கத்தால் முன்னேறமுடியுமா? என்பதை வெளிக்காட்டுவதாக இருக்கும்.

# ரணிலுக்கு எதிராக முஸ்லிம் பா.உ.கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்திலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கெதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்குத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ஈராக்பிணக்கு குறித்து ஐக்கியநாடுகள் சபையின் 58ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் ஆற்றிய உரை குறித்தே முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிலைப்பாட்டை எடுக்க நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை ஈராக்கின் விடயத்தில் உரிய நேரத்தில் தலையிட்டு தமது படைகளை அனுப்பியிருந்தால் அமெரிக்கா அந்த இடத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் இருந்திருக்காது என்ற சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து.

அமெரிக்காவுக்குச் சார்பான கருத்து எனவும் இதன் மூலம் பிரதமர் ரணில் முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதான கருத்து வெளிப்பட்டுள்ளது எனவும் கண்டனம் தெரிவித்துள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூற்றை பிரதமர் வாபஸ் பெறவேண்டும் என்றும் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத்தில் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# இலங்கையின் அமைதி நடவடிக்கைகள் உலகில் முன்னணியில் உள்ளது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் முன்வைக்கவுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனை குறித்து திறந்தமனதுடன் ஆராய எமது அரசு தயாராக இருக்கிறது என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற போது அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இனப்பிரச்சினை தொடர்பாக பொது இணக்கப்பாடு வந்த பின்னர் இடைக்காலசபை வழங்கலாம் என பொதுசன ஐக்கிய முன்னணி கூறிவருகிறது. இடைக்கால நிர்வாக சபையை வழங்கிய பின்னர் இறுதித் தீர்வை எட்டுவது பற்றி எமது அரசு வலியுறுத்திவருகிறது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொழுது முஸ்லிம் சிங்கள மக்களின் பிரச்சினைகள், மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் சர்வதேச அரங்கில் வரவேற்பைப் பெற்றுள்ளன. பிரச்சினைகள் உள்ள நாடுகளில் நடைமுறையில் உள்ள சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரையில் இலங்கையின் நடைமுறைகள் முன்னணியில் இருப்பதை ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தின் போது உலகத்தலைவர்கள் தனக்குச் சுட்டிக்காட்டியதாக அவர் மேலும் கூறியுள்ளார். நிதி, காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய திட்டத்தை புலிகள் முன்னர் பொ.ஜ.முன்னணியிடம் சமர்ப்பித்தனர். போர்நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்தாலும் பிரச்சினைகள் உள்ளதை அரசு ஏற்றுக்கொள்கிறது. பொறுமையுடன் நடந்து கொண்டு இவற்றிற்குத் தீர்வு காண்பதே அரசின் எதிர்பார்ப்பாகும். இவ்விடயத்தில் சமாதானத்தை விரும்பும் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்திருப்பதாகவும், தெரிவித்த பிரதமர் மக்களிடம் இதனை எடுத்துக்கூறுமாறு பிரதமர் அமைச்சரவை உறுப்பினர்களைக் கேட்டிருந்ததாகவும் கூறியுள்ளார்.

# கனேடிய வெளிநாட்டமைச்சர், சபாநாயகர் இம்மாதம் கொழும்பிற்கு விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளிநாட்டமைச்சர் ஜஸ்வன்சிங்காவும் கனேடிய வெளிநாட்டமைச்சர் வில்லியம் கிரகம் மற்றும் கனேடிய பாராளுமன்ற சபாநாயகர் பீற்றர் பிலிக்கனும் இம்மாதம் சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இம் மாதம் 15ஆம் திகதி கொழும்பு வரவுள்ள இவர்களில் இந்திய, கனேடிய வெளிநாட்ட மைச்சர்கள் சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை தனித்தனியே சந்தித்து உரையாட விருப்பதாகத் தெரியவருகிறது.

அத்துடன் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளையும் சந்தித்து உரையாடுவார்களென தெரியவருகிறது. கனேடிய வெளிநாட்டமைச்சர் வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களையும் சந்திப்பதுடன் கனடா உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களையும் பார்வையிடுவார் என தெரியவருகிறது. இதேவேளை ஐந்துநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இம்மாதம் 12ஆம் திகதி கொழும்பு வரவுள்ள கனேடிய சபாநாயகர் பீற்றர் பிலிக்கன் பாராளுமன்றம், பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் நீர்கொழும்பில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சியொன்றிலும் கலந்துகொள்ளவுள்ள அவர் சிறிலங்காவின் சபாநாயகர் மைக்கல் பெரேரா, ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

# ஜே. வி. பி. யின் நோக்கம் சிறி.சு.கட்சிக்கு முடிவு கட்டுவதே

### -ல.சமசமாஜக்கட்சியின் அமைப்பாளர் ரெஜி பெரேரா

(கொழும்பு)

"சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு முடிவு கட்டுவதே ஜே.வி.பி.யின் நோக்கமாகும்" இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் அமைப்பாளர் ரெஜிபெரேரா கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் "சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஜே.வி.பி.யின் கூட்டும் தற்போதைய அரசியல் நிலைமையும்" எனும் தொனிப் பொருளில் பேசுகையில்,

முன்பு ஒரு காலத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளுடன் காணப்பட்டபோது, ஜே.வி.பி.அதற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்தது. இப்படிப்பட்ட ஜே.வி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டுச்சேருமானால், இனப்பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்படுமா என்பது ஐயத்திற்குரியது என்றும் அவர் கூறியுள்ளார். அதுமட்டுமன்றி இந்த இருகட்சிகளும் கூட்டுச் சேருமானால், அனுராதபுரத்தில் லங்கா சமசமாஜக்கட்சி தனித்தே போட்டியிடும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக்கட்சியின் அனுராதபுர அமைப்பாளர் கருணாரட்ணவும் ஏனையவர்களும் கலந்து கொண்டுள்ளார்கள்.

# அவுஸ். கிரிக்கெட் சபையால் புதிய விதிமுறை அறிவிப்பு

போட்டியின்போது எதிரணி வீரர்களை வெறுப்பேற்றி அவர்களது கவனத்தைத் திசைதிருப்பும் விதமான செயலில் ஈடுபடும் வீரர்களை கட்டுப்படுத்துவதற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை புதியவிதிமுறைக் கொள்கையை உருவாக்கியுள்ளது.

இம்மாதிரியான செயல்களில் ஈடுபடும் வீரர்களுக்கு 5 டெஸ்ட் அல்லது 10 ஒருநாள் ஆட்டங்கள் அல்லது வாழ்நாள் தடைவிதிக்க இந்தப் புதிய கொள்கை வழிவகுக்கும்.

இதன்மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் அவுஸ்திரேலியா அணிக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயர் களையப்படும் என அந்நாட்டு கிரிக்கெட் சபை உணர்ந்துள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற போட்டியில் மேற்கிந்தியத்தீவு வீரர் ராம்நரேஷ் சர்வானுக்கும், அவுஸ்திரேலிய வீரர் கிளேம் மெக்ராத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது தெரிந்ததே.

# சிம்பாவ்வேயுடனான டெஸ்ட் அவுஸ். வீரர்கள் விபரம்

போர்த்தில் எதிர்வரும் 09ஆம் திகதி தொடங்கும் சிம்பாவ்வேயுடனான முதல் கிரிக்கெட் டெஸ்ட்டுக்கான அவுஸ்திரேலிய அணியில் டாமியன் மார்ட்டின் இடம் பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிக்குப் பின்னர் கைவிரல் காயம் காரணமாக கடந்த மூன்று மாதங்களாக மார்ட்டின் ஆட்டங்களில் பங்கேற்கவில்லை

சிம்பாவ்வேயுடனான போட்டியில் விளையாடவுள்ள அவுஸ்திரேலிய வீரர்கள்:-

ஸ்டீவோ (அணித்தலைவர்) மத்யூஹைடன்,ஜஸ்ரின் லாங்கர், ரிக்கி பொண்டிங், டாமியன்மார்டின், டரன லேமன், அன்ட்ரூபிச்செல், அடம் கில் கிறிஸ்ட், ஜாசன் கிலெஸ்பி, பிரெட்லீ, ஸ்ருவர்ட் மக்கில், கிளென் மெக்சாத், பிராட் வில் லியம்ஸ்.



# கலாச்சார சீரழிவில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர்

(வவுனியா)

வவுனியாவில் கலாச்சாரச் சீரழிவில் ஈடுபடும் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அண்மைக் கால மாக மாணவர்களும், இளைஞர் களும் குழுக்களாகக்கூடி கலாச் சாரச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவது அதிகரித்து வருகின் றது. இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக நேற்று வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும், பெற்றோர்களுக்கு மான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ராஜ ரட்ணம் தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம், வன்னி. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், இராஜகு கனேஸ்வரன் அகியோர் கலந்து கொண்டனர். இதில் வவுனியா மா வட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் சி.எழிலன் உரை யாற்றும் போது வவுனியாவில் தமிழர்களின் கலாச்சாரத்தைச் சீரழிக்க சில தீய சக்திகள் தூப மிடுகின்றன. அதற்கு உடந்தையாக மாணவர்களும், இளைஞர்களும் செயற்பட்டு வரு கின்றனர். தமிழர்களின் கலாச்சாரத் திற்கு ஊறுவிளைவிக்க முயலும் எந்த ஒரு சக்திகளின் மீதும் நாம் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட் டோம். அண்மைக்காலத்தில் குறிப் பாக மாணவர் சமூகம் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அதி கரித்து வருகின்றது. இது வேத னைக்குரிய ஒரு விடயமாகும். இவ் வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் மீதும் இளைஞர்கள் மீதும் இனிவசரும் காலங்களில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (10,21)

# புலிகள் மீதான தடை அமெ.வினால் நீடிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை அமெரிக்கா மீண் டும் நீடித்துள்ளது. அமெரிக்க இரா ஜாங்க அமைச்சினால் நேற்று முன் தினம் வெளியிடப்பட்ட அறிக்கை யிலேயே விடுதலைப்பலிகள் மீதான தடைநீடிப்பு குறித்து குறிப்பிடப் பட்டுள்ளது.

சிறிலங்கா அரசுடன் விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் தொடர்ந்து பயங்கரவாத நடவடிக் கையில் ஈடுபட்டுவருவதாக அமெ ரிக்க இராஜங்க அமைச்சின் குரல் தரவல்ல அதிகாரி ரிச்சட்பௌச்சர் தெரிவித்துள்ளார்.

அவ்வகையில் சர்வதேச பயங் கரவாத பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பும் இணைக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

அதேவேளை சர்வதேச பயங்கர வாதப்பட்டியயில் இருந்து விடுத லைப்புலிகள் அமைப்பை நீக்குவது தொடர்பாக அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர் மிரேஜ் உடனான சந்திப்பின்போது அமைச்சர் மிலிந்த மொறகொட ஆராய்ந்திருப்பதாக தெரியவரு கிறது.

# யாழ். வேலணையில் உல்லாசவிடுதி அமைக்க அரசு ஒப்பந்தம்

வேலணை பகுதியில், 180 மில் லியன் ரூபா செலவில் ஓர் மூன்று நட்சத்திர உல்லாச விடுதியொன் றை அமைக்க ஒப்பந்தம் கைச் சாத்தாகியுள்ளது. ரில்க்கோ ஹொலிடேய்ஸ் லிமிட்டெட் என்னும் வெளிநாட்டு நிறுவனமும் இலங்கை அபிவிருத்தி அமைச்சும் செய்து கொண்ட மேற்படி உடன்படிக்கை யின் கீழ், 50 அறைகள் கொண்ட ஓர் உல்லாசவிடுதியை வேலணை யில் அமைப்பதுடன். வருகிற ஆண்டு கோடைகால விடுமுறை யில் அதைத் திறக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

குடாநாட்டிற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டவர்கள், உயர் வர்த்த கர்கள், வெளிநாட்டு தூதரக அதி காரிகள் மற்றும் உல்லாசப் பிரயா ணிகள் உயர்ரக வசதிகளுடன் தங் கிச் செல்லவே இந்த விடுதி அமைக்கப்படுவதாகவும், இது போன்று இன்னும் பல அபிவிருத் திப் பணிகள் விரைவில் அமுல் படுத்தப்படவுள்ளதாகவும் அபி விருத்தி அமைச்சு தெரிவித் துள்ளது.

# ஒருவர் படுகாயம்

(வடமராட்சி கிழக்கு)

பளை நகரப்பகுதியில் நேற்று கண்டர் வாகனமொன்று மோதியதில் பாதசாரி ஒருவர் படுகாயமடைந்தார். மாலை 3.30மணியளவில் கிளிநொச் சியிலிருந்து யாழ். நோக்கி பொருட் களுடன் சென்றுகொண்டிருந்த மேற் படி வாகனம் வீதியைக் கடந்து சென்ற சோரன்பற்றைச் சேர்ந்த வடி வேலு என்பவரை மோதியது. இத னால் தலையில் பலத்த காயங் களுக்கு உள்ளாகினார்.

அவ்வேளையில் அவ்வழியால் நோயாளர்களை ஏற்றிச் சென்ற அம் புலன்ஸ் வாகனமொன்று அவரையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றது. கண்டர் வாகனச் சாரதி தமிழீழ காவல்துறையின் பளைப் பணிமனையினரால் விசார ணைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்பட வுள்ளார். (11)

### அ.உ.பா...

அப்பகுதிக்குச் சென்று நிலவரத் தைப் பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்சுடன் ஆலயப் பகுதிக்குச் செல்ல முற்பட்ட பொது மக்கள் அங்கு நிலை கொண்டுள்ள படையினரால் தடுத்து நிறுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த ஆலயத் திற்கு பக்தர்களை அனுமதிப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப் பினர் ந.ரவிராஜ் அங்கு நிலை கொண்டுள்ள படைப்பிரிவின் அதி காரிகளுடன் பேச்சுக்களை நடாத்தி யுள்ளார்.

இப்பேச்சுக்களை அடுத்து ஒரு தொகுதி பக்தர்களை குறித்த ஆலயத்துக்கு சென்று வழிபட்டுவர அனுமதியளிப்பதாக அறிவித்துள்ள படைத்தரப்பு. அதற்கான ஏற்பாடு களைச் செய்வதற்காக இரண்டு வாரகால அவகாசத்தையும் கோரி யுள்ளனர். ஆனால் நவராத்திரி விழா இருதினங்களில் முடிவுறவுள் ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த கெற்பெலி கிராமத்தின் கரையோரப் பகுதி களுக்கு பொதுமக்கள் செல்ல படைத்தரப்பு கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

### எரிந்த...

மீட்கப்பட்டுள்ளார். அறையினுள் சுவரோரமாக காணப்பட்ட இச் சட லத்தின் மேற்பகுதி முழுவதும் முற் றாக கருகியநிலையில் கால்கள் இரண்டும் மட்டுமே ஓரளவு சேத மடைந்த நிலையில் காணப்பட்டது. இதேவேளை தந்தையார் வீட்டில் இல்லாத நிலையில் மற்றொரு சகோதரியும் யாழ். பல்கலைக் கழ கத்தில் படிக்கச் சென்றிருந்ததா கவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும் பரபரப்பை இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ள நிலையில் பருத் தித்துறைப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஆண்டும் பருத்தித்துறைப் பகுதியில் பரவ லாக வீடுகளில் தனித்திருந்த வயோதிபப் பெண்கள் கொல்லப் பட்டு எரியூட்டப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக் கது. (27)

### எமது...

யில் அரச தரப்பால் தமிழ்க்குடும் பங்கள் சிதைக்கப் பட்டன. இதனால் பல்லாயிரக் கணக்கான விதவை களும் அதைவிட பலமடங்கு அனா தைச் சிறுவர்களும் உருவாக்கப் பட்டனர். அத் தோடு சுமத்தப்பட்ட பெரும் பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாக பெரும் எண்ணிக்கை யான சிறுவர்கள் அவர்களின் குடும் பங்களால் போசிக்க முடியாதவர் களாக வீடுகளை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது.

அது மட்டுமன்றி உறைவிடம் மின்மை, கல்வி இன்மைபோன்ற காரணங்களால் எமது தாயகப் பகுதியில் 88000 சிறுவர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர் என தகவல்கள் காட்டுகின்றன. இதனால் இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் விடுத லைப்புலிகளை நாடிவந்தனர். அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் வாழ்வளிக்கவேண்டிய கடமையும் எமது இயக்கத்துக்கு ஏற்பட்டது. இதனை கண்டுணர்ந்து கொண்ட எமது தேசியத் தலைவர் இவர்களை பராமரிக்கும் நோக்கில் மேற்குறிப்பிட்ட இல்லங்களை அமைத்தார். தமிழ் மக்களின் துயர் துடைப்பும் பணியில் நீண்டகாலமாக செயலாற்றிவரும் தமிழர்புனர் வாழ் வுக்கழகம் இல்லங்களை அமைத்து கரிசனையுடன் செயல்பட்டு வரு கிறது.

அத்தோடு வயது குறைந்த வர்களை புலிகள் இயக்கத்தில் இணைத்துக்கொள்வதை முற்றாக நிறுத்துமாறும் தடை விதிக்கப்பட் டது. இதன் அடுத்தகட்டமாக எமது அமைப்பில் இணைந்து கொண்ட வர்களை படிப்படியாக விடுவிக்க தொடங்கினோம் இந்தவகையில் கிட்டத்தட்ட 800பேரை அவர்களி னது பெற்றோர் அல்லது உறவினர் களிடம் சேர்த்துள்ளோம்.

அது மட்டுமன்றி தற்போது போராட்டத்தில் இணையும் பொரு ட்டு எமது செயலகங்களை நாடி வருபவர்களை உடனுக்குடன் அவர் களது பெற்றோர்களிடம் இணைத் தும் வருகிறோம். தற்போது இவ் விடயத்தில் சர்வதேச நிறுவனங்கள் குறிப்பாக யூனிசெப் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பன கரி சனை கொண்டு செயல்படுவதை நாம் வரவேற்கிறோம் இதன் முதல் கட்டமாக வன்னியில் சிறுவர் இடைத்தங்கல் முகாம் தனது செயல்பாட்டை ஆரம்பிக்கிறது. இதற்கு எம்மாலான பூரண ஒத்து ழைப்பை வழங்கி உள்ளோம். என வும் தெரிவித்தார். (லோ)

### த.பு.க...

லிகளால் வயது குறைந்தவர்கள் என விடுவிக்கப்பட்ட 49 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இணைக்கப்பட்ட சிறுவர்களை ஊடகவியலாளர்கள் பேட்டி கண்டபோது, எமது தாயகப் பகுதிகளில் எமது சொந்த நிலத்தில் எம்மை அடிமைகள் போல அன்னி யர்கள் நடத்துகின்றனர்.

நாம் பாடசாலை செல்லும் போது பெரியவர்களை படையினர் தாக்கு வதைப் பார்த்துள்ளோம். வயது வேறுபாடின்றி எம்மையும் தாக்கி யுள்ளனர். இதனால் எம்மால் படிக்க முடியவில்லை. நாம் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தவேளையே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணையவே விரும்பினோம். நாம் அப்போது புலிகளுடன் இணைய முடியாமல் போய்விட்டது. இப்போது நாங்கள் அவர்களுடன் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடை த்தது.

நாம் எமது சொந்த விருப்பி னாலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்தோம். எம்மை யாரும் வற்புறுத்தி அழைக்க வில்லை எனவும் தெரிவித்த அவர் கள் மேலும் தெரிவிக்கையில் விடு தலைப்புலிகள் எம்மை பலமுறை போராடுவதற்கு வயதுபோதாது நீங் கள் வீட்டுக்குச் செல்லுங்கள் என அனுப்பினார்கள். ஆனால் நாங்கள் மறுத்துவிட்டோம். அதன்பின் எம்மை படிப்பதற்காக இப்போது இங்கே அனுப்பியுள்ளனர் எனவும் அந்தச் சிறுவர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர். (லோ)

### புலிகள்....

நோக்கில் தற்காலிகமாக வேனும் அங்கு குவிக்கப்பட்டிருந்த படையி னரை விலக்கி சுமுகநிலை ஏற்ப டுத்த உதவுமாறு கேட்டுக்கொண் டனர். ஆனால், ஆயுதப்படைத்தரப்பு இதனை நிராகரித்தது.

இந்நிலையிலும், சுமுகநிலை ஏற்படுத்தும் நோக்கில் சம்பவம் நடந்த இடம் நோக்கி விடுதலைப் புலிகள் நகர்ந்தபோது அங்கு நின் றிருந்த சிப்பாய்கள் துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டனர். இந்நி லையில் பதட்டநிலையைத் தவிர்ப்பதற்காக மேற்கொண்ட முயற்சியும் தோல்வி கண்டது.

இதேவேளை கனரக ஆயுதங் களுடன் பெருமளவில் குவிக்கப் பட்டுள்ள மக்களின் ராணுவத்தினர் தாக்குதலுக்கான ஓர் ஆயத்த நிலையில் காணப்படுவதுடன் மக்கள் மத்தியில் பதற்ற நிலையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனரே தவிர அங்கு அமை தியை ஏற்படுத்துவதற்கு விட்டுக் கொடுப்பு எதனையும் செய்வதறகு ராணுவம் மறுத்துவருகின்றது.

இதேவேளை ராணுவத்தினரை சுற்றிநிற்கும் மக்கள் மீது படையினர் கண்ணீர்புகைப் பிரயோகதையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் போராளி ஒருவரும் பொதுமக்கள் இருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### இராணுவ...

எனபவருமே பலியாகியுள்ளனர். இவ் விபத்தின் போது உந்துருளியும் அதில் பயணம் செய்தவர்களும் கணிசமான அளவுதூரம் இராணுவத் துருப்புக் காவியால் வீதி வழியே இழுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது. இதேவேளை சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நீதவானோ, பொலிசாரோ சம்பவ இடத்திற்கு வராதநிலையில் அப்பகுதியி லிருந்து கொல்லப்பட்டவர்களின் சடலத்தை எடுத்துச் செல்ல சிறில ங்காப் படையினர் மேற் கொண்ட முயற்சிகளைக் கண்டித்து அப்பகுதிகளில் திரண்ட நூற்றுக் கணக்கான பொதுமக்கள் பிரதான வீதியை மறித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மறி யல் போராட்டக்காரருக்கும், சிறி லங்காப் படையினருக்குமிடையில் முறுகல் நிலை வளர்ந்தது. அப் பகுதியில் பெருமளவு படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டனர். அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட சிலரை சிறிலங்காப் படையினர் தாக்கியுமுள்ளனர். இந்தப் போராட் டத்தில் ஈடுபட்டோரைக் கலைக்க கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்கு தல்களையும் துப்பாக்கிப் பிரயோ கத்தையும் மேற்கொண்டுள்ளனர். இதனால் படையினர் மீது கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் இறந்தவர்களின் சடலங்களை சிறி லங்காப்படையினர் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறை யில் வைத்துள்ளதாகவும், சிறிலங் காப் பொலிசார் விசாரணை மேற் கொண்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. இதேவேளை பொது மக்களுக்கும் படையினருக்குமிடை யில் இடம் பெற்ற கல்லெறித் தாக் குதலில் இரண்டு பொதுமக்கள் காய மடைந்துள்ளனர்.

இதனையடுத்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினர் சம்பவ இடத்திற்குச் சென்று பிரச்சினையைத் தணிக்க முற் பட் டனர். ஆனாலும் மக்கள் அதனைக் கேட்காது தொடர்ந்தும் போரா டினர்.இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரின் உதவியைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கோரியிருந்தனர். (27,33)


## அறிவித்தல்

**எமது மாவட்டத்தில் 17,749 குடும்பங்கள் இதுவரை மீளக்குடியேறியுள்ளனர். இவர்களில் 25,000/- இற்கு தகுதியுடைய குடும்பங்கள் 15,000 ஆகும். ஆனால் இதுவரை 10170 குடும்பங்கள் மட் டுமே இதற்கான கொடுப்பனவினைப் பெறுவதற்காக விண்ணப்பித் துள்ளனர். இன்னும் 5000 குடும்பங்கள் வரையில் இதற்கான விண்ணபத்தினைப் பூர்த்தி செய்து உதவி அரச அதிபருக்கு கையளிக்காத நிலையுள்ளது. இதுவரை மேற்படி 25,000/- பெறுவதற்கான விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்காத அனைவரும் 2003.10.15ஆம் திகதிக்கிடையில் தங்களது பகுதி ஊரக புனர்வாழ்வுக் குழு, கிராம சேவையாளர் ஊடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். 15ஆம் திகதிக்குப் பின் கிடைக்கின்ற எந்த விண்ணப்பமும் பணத்தினைப் பெறுவதற்கான தகுதியில்லை என்பதனை தங்களுடைய தயவான கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.**

தி.இராசநாயகம்,
அரச அதிபர், கிளி.

(சி-8637)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.